சாராம்சம்: இனிய குழந்தைகளே, இந்தப் பாடசாலை ஒரு சாதாரண மனிதனிலிருந்து நாராயணனாக ஆகுவதற்குரியது. உங்களுக்குக் கற்பிப்பவர் உண்மையான தந்தையும், உண்மையான ஆசிரியரும், உண்மையான சற்குருவும் ஆவார். நீங்கள் இந்த நம்பிக்கையில் உறுதியாக இருக்க வேண்டும்.

கேள்வி: குழந்தைகளாகிய நீங்கள்; என்றுமே எதைப் பற்றிச் சிறிதளவேனும் கவலைப்படக்கூடாது? ஏன்?

பதில்: இந்தப் பாதையைப் பின்பற்றும்பொழுது, எவரேனும் இதய வழுவல் ஏற்பட்டு, தனது சரீரத்தை விட்டு நீங்கினாலும் நீங்கள் கவலைப்படக்கூடாது. ஏனெனில் ஒவ்வொருவரும் தனது சொந்தச் செயல்களைச் செய்ய வேண்டும் என்பது உங்களுக்குத் தெரியும். நீங்கள் சந்தோஷமடைய வேண்டும். ஏனெனில் அந்த ஆத்மா ஞானம், யோகம் எனும் சமஸ்காரங்களைத் தன்னுடன் எடுத்துச் சென்றுள்ளதால், அவர் இப்பொழுது பாரதத்திற்கு மேலும் சிறப்பாகச் சேவை செய்வார் என்பது உங்களுக்கு தெரியும். இதில் கவலைப்படுதல் என்ற கேள்விக்கே இடமில்லை; இது நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளது.

பாடல்: நீங்களே தாயும், நீங்களே தந்தையும்.

ஓம் சாந்தி. குழந்தைகளாகிய உங்களுக்குத் தந்தை விளங்கப்படுத்துகிறார். தந்தை உங்களை ‘குழந்தைகளே’ என அழைக்கிறார் என்பதும், பாப்தாதா இணைந்துள்ளனர் என்பதும் குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். முதலில் பாப்தாதாவும், பின்னர் குழந்தைகளும் உள்ளனர்;. இது ஒரு புதிய படைப்பு ஆகுகின்றது. தந்தை இராஜயோகத்தைக் கற்பிக்கிறார். அவர் மிகச்சரியாக 5000 வருடங்களுக்கு முன்னர் கற்பித்ததைப் போல எங்களுக்கு இராஜயோகத்தைக் கற்பிக்கிறார். பின்னர், பக்தி மார்க்கத்தில், அவர்கள் இதன் அடிப்படையில் ஒரு நூலை உருவாக்கி, அதனைக் கீதை என்று அழைக்கிறார்;கள். எவ்வாறாயினும், இந்நேரத்தில், இது கீதையைப் பற்றிய கேள்வியல்ல. அவர்கள் அந்தச் சமயநூலைப் பின்னரே உருவாக்கி, அதனை “இலகு இராஜயோகத்திற்கான சமயநூலாகிய ஸ்ரீமத் பகவத்கீதை” என அழைத்தனர். பக்தி மார்க்கத்திலுள்ள சமயநூல்களைக் கற்பதனால், எந்த நன்மையும் இல்லை, சிவபாபாவை வெறுமனே நினைவுசெய்வதால்; மாத்திரம் ஆஸ்தியைப் பெறவும் முடியாது. இந்தச் சங்கம யுகத்தில் இப்பொழுது மாத்திரமே ஆஸ்தி பெறப்பட முடியும். தந்தையே எல்லையற்ற ஆஸ்தியைக் கொடுப்பவர், அவர் அதைச் சங்கம யுகத்தில் மாத்திரமே கொடுப்பார். தந்தை இராஜயோகத்தைக் கற்பிக்கிறார். ஒரேயொருவர் கற்பிப்பதற்கும், சாதுக்கள், புனிதர்கள் போன்றோர் கற்பிப்பதற்கும் இடையே பகலிற்கும் இரவிற்கும் இடையிலான வித்தியாசம் உள்ளது. அவர்கள் புத்தியில் கீதையே உள்ளது. கிருஷ்ணர் கீதையைக் கூறியதாகவும், அதனை வியாசர் எழுதியதாகவும் அவர்கள் நம்புகிறார்கள். எவ்வாறாயினும் கிருஷ்ணர் கீதையைக் கூறவில்லை, ஏனெனில் அது கிருஷ்ணருடைய காலமும் அல்ல என்பதால் கிருஷ்ணரின் ரூபம் அந்நேரத்தில் இருந்திருக்க முடியாது. தந்தை விளங்கப்படுத்தி, அனைத்தையும் தெளிவாக்குகிறார். அவர் கூறுகிறார்: இப்பொழுது, நீங்களே தீர்மானியுங்கள்;!

அவருடைய பெயர் பிரபல்யமானது. சத்தியத்தைப் பேசுகின்ற அவராலேயே சாதாரண மனிதனை நாராயணனாக மாற்ற முடியும். சாதாரண மனிதனிலிருந்து நாராயணனாக மாறுவதற்காகவே நாங்கள் இந்தப் பாடசாலையில் அல்லது உருத்திர ஞான யாகத்தில் அமர்ந்திருக்கிறோம் என்பது குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். சிவபாபா எனும் பெயர் சிறந்தது. நிச்சயமாக தந்தை, தாதா இருவரும் இருக்கிறார்கள். நீங்கள் இந்த நம்பிக்கையுடன் இங்கே வந்திருக்கிறீர்கள். தந்தை அனைத்து வேதங்களினதும், சமயநூல்களினதும் சாராம்சத்தைப் பிரம்மா மூலம் விளங்கப்படுத்துகிறார். அத்துடன் உங்களைத் திரிகாலதரிசி (முக்காலங்களையும் அறிந்தவர்கள்) ஆக்குவதாகவும் அவர் கூறுகிறார். நீங்கள் திரிலோகநாத் (மூவுலகங்களுக்கும் அதிபதிகள்) ஆகுகின்றீர்கள் என்பதல்ல் இல்லை. நீங்கள் சிவனின்; வீட்டிற்கு மாத்திரமே அதிபதிகள் ஆகுகிறீர்கள், அது ஓர் உலகம் என அழைக்கப்படுவதில்லை. இவ்வுலகம் மாத்திரமே மனிதர்கள் வாழ்கின்ற இடம் ஆகும். இதுவே உயிர் வாழுகின்ற உலகமான, மனித உலகமாகும், ஆனால் அதுவோ அசரீரி உலகம் ஆகும். உங்களுக்கு மூவுலகங்களைப் பற்றிய ஞானம் மாத்திரமே கொடுக்கப்படுகிறது, ஆனால் அவர் உங்களை மூவுலகங்களின் அதிபதிகள் ஆக்குவதில்லை. நீங்கள் மூவுலகங்கள் பற்றிய ஞானத்தைப் பெற்றுள்ளீர்கள், இதனாலேயே நீங்கள் திரிலோகதரிசிகள் (மூவுலகங்களையும் காண்பவர்கள்) என அழைக்கப்படுகிறீர்கள். இலக்ஷ்மி நாராயணனையும் கூட மூவுலகங்களின்; அதிபதிகள் என்று அழைக்க முடியாது. விஷ்ணுவையும் கூட மூவுலகங்களின் அதிபதி என்று அழைக்க முடியாது, ஏனெனில் அவரிடம் மூவுலகங்களைப் பற்றிய ஞானம் இல்லை. தங்கள் குழந்தைப் பருவத்தில் இராதையும் கிருஷ்ணராக இருந்த இலக்ஷ்மி நாராயணனுக்குக் கூட மூவுலகங்களைப்; பற்றிய ஞானம் இல்லை. நீங்கள் திரிகாலதரிசியாகி ஞானத்தைப் பெற வேண்டும். கிருஷ்ணர் மூவுலகங்களின் அதிபதியாக இருந்தார் என்று அவர்கள் கூறுகிறார்கள், ஆனால் அது அவ்வாறு இருக்கவில்லை, மூவுலகங்களின் அதிபதியாக இருப்பவர் மூவுலகங்களையும் ஆட்சிசெய்பவராகவே இருப்பார். அவர் வைகுந்தத்தின் (சுவர்க்கம்) அதிபதியாக மாத்திரமே ஆகுகிறார். சத்திய யுகமே வைகுந்தம் என்று அழைக்கப்படுகிறது. திரேதா யுகமானது வைகுந்தம் என்று அழைக்கப்பட முடியாது. என்னால் (சிவபாபா) இவ்வுலகின் அதிபதியாக முடியாது. சிவபாபா, பரம தத்துவமான, பிரம்மத்திற்கு மாத்திரமே அதிபதியாவார். ஆத்மாக்களாகிய நாங்கள் நீள்கோள வடிவங்களில் வசிக்கின்ற பிரம்மாண்ட்டிற்கு மாத்திரமே அவர்; அதிபதியாவார். பிரம்மா, விஷ்ணு, சங்கரர் சூட்சும உலகில் வசிப்பதால், அவர்களை அவ்விடத்தின் அதிபதிகள் என்று கூறுவீர்கள், ஆனால் நீங்களோ வைகுந்தத்தின் அதிபதிகள் ஆகுகின்றீர்கள்;. ஒன்று சூட்சும உலகத்தைப் பற்றிய விடயமும், மற்றையது அசரீரி உலகைப் பற்றிய விடயமும் ஆகும். உங்களால் மாத்திரமே திரிகாலதரிசியாக முடியும். உங்கள் மூன்றாவது கண்கள் திறந்துள்ளன. அவர்கள் நெற்றியின் மத்தியில் மூன்றாவது கண்ணைக் காட்டுகிறார்கள். இதனாலேயே அவர்கள் திரிநேற்றி (மூன்று கண்களை உடையவர்) என்று கூறுகிறார்கள். அவர்கள் தேவர்களை இந்த அடையாளத்துடன் காட்டுகிறார்கள். ஆனால் நீங்கள் கர்மாதீத் ஆகும்பொழுதே, முக்கண்களை உடையவர்கள் ஆகுகிறீர்கள்;; அது இக்காலத்தையே குறிக்கிறது. தேவர்கள் ஞானச் சங்கை ஊதுவதில்லை. அவர்கள் ஒரு பௌதீகச் சங்கைக் காட்டியுள்ளார்கள். அது வாயைக் குறிக்கிறது. நீங்கள் அதனூடாக ஞானச் சங்கை ஊதுகிறீர்கள். அவர்கள்

ஒரு பெரிய பல்கலைக்கழகத்தில் ஞானத்தைக் கற்பது போன்றே, நீங்களும் ஞானத்தைக் கற்கிறீர்கள். இதுவே தூய்மையாக்குபவருக்கு உரிய, இறைதந்தையின் பல்கலைகழகம் ஆகும். நீங்கள் அத்தகைய பெரிய பல்கலைக்கழகத்தின் மாணவர்கள், அத்துடன் எங்கள் பாபாவே எங்களுடைய தந்தையும், எங்களுடைய ஆசிரியரும், எங்களுடைய சற்குருவும் ஆவார்; அனைத்தும் அவரே என்பதையும் நீங்கள் அறிவீர்கள். தாயும் தந்தையுமானவர் அனைத்துச் சூழ்நிலைகளிலும் உங்களுக்குச் சந்தோஷத்தைக் கொடுக்கிறார். இதனாலேயே, “நீங்களே தாயும், நீங்களே தந்தையும்” எனக் கூறப்படுகின்றது. அவரே மிகவும் இனிமையான, சக்கரீன். தேவர்களைப் போன்று இனிமையானவர்களாக எவரும் இருக்க முடியாது. பாரதம் மிகவும் சந்தோஷமானதாகவும், என்றென்;றும் ஆரோக்கியமானதாகவும், என்றென்;றும் செல்வம் மிக்கதாகவும் இருந்தது என்பது குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும்; அது முற்றிலும்; தூய்மையாக இருந்தது. விகாரமற்ற பாரதம் எனவும் கூறப்படுகின்றது. எவ்வாறாயினும்;; உங்களால் இதனை இனிமேலும் கூறமுடியாது. இப்பொழுது அது விகாரமுள்ளதாகவும், தூய்மையற்றதாகவும் உள்ளது என்றே நீங்கள் கூறுவீர்கள். தந்தை விளங்கப்படுத்தி, அனைத்தையும் எளிமையாக்குகின்றார். உங்களுக்குத் தந்தையையும், ஆஸ்தியையும் தெரியும். பாபா உங்களை மிகவும் இனிமையானவர்கள் ஆக்குகின்றார். ஸ்ரீமத்திற்கேற்ப நீங்களும் கற்று, ஏனையோருக்கும் கற்பிக்க வேண்டும் என்பதனை நீங்கள் உணர்கின்றீர்கள். இது மாத்திரமே உங்கள் வியாபாரம்! ஏனெனில், இதைத் தவிர உங்கள் பல பிறவிகளின் செயல்களுக்கான பெருமளவு துன்பம் உள்ளது. ஒருவர் நோய்வாய்ப்பட்டு, மறுநாள் அவருக்கு இதயம் வழுவல் ஏற்பட்டால், அதை நாடகத்தில் உள்ள நியதி என்றே கருதுங்கள். அந்த ஆத்மா வேறு ஒரு பாகத்தினை நடிக்க வேண்டி இருக்கலாம். ஆகவே, துன்பம் எனும் கேள்விக்கே இடமில்லை. நாடகம் நிச்சயிக்கப்பட்டுள்ளது; அவர் மற்றுமொரு பாகத்தினை நடிக்க வேண்டும். கவலைப்படுவதற்கு என்ன உள்ளது? அவர் பாரதத்திற்கு மேலும் சிறப்பாகச் சேவை செய்வார். ஏனெனில் மற்றவர்களுக்கு நன்மையளிக்கக்கூடிய அத்தகைய சம்ஸ்காரங்களை அவர் எடுத்துச் சென்றுள்ளார், ஆகவே, நீங்கள் சந்தோஷமாக இருக்க வேண்டும். உங்கள் தாய் இறந்தாலும் நீங்கள் அல்வா சாப்பிட வேண்டும் என்று விளங்கப்படுத்தப்பட்டுள்ளது! இதற்குப் பெருமளவு புரிந்துணர்வு தேவைப்படுகின்றது. நாங்கள் நடிகர்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஒவ்வொருவரும் தமக்கே உரிய வழியில் செயற்பட வேண்டும். இது நாடகத்தில் நிச்சயிக்கப்பட்டுள்ளது. நீங்கள் ஒரு சரீரத்தை விட்டு நீங்கி, மற்றுமொரு பாகத்தை நடிக்க வேண்டும். இங்கிருந்து எடுத்துச் செல்லும் சம்ஸ்காரங்களிற்கேற்ப, நீங்கள் மறைமுகமான முறையில் அங்கு சேவை செய்வீர்கள். ஆத்மாக்களில் சம்ஸ்காரங்கள் உள்ளன. முக்கியமான, சேவாதாரிக் குழந்தைகளிற்கு மரியாதை அளிக்கப்படுகின்றது. குழந்தைகளாகிய நீங்கள் மாத்திரமே பாரதத்திற்குச் சேவை செய்து நன்மை அளிப்பவர்கள். ஏனைய அனைவரும் தொடர்ந்தும் இழப்பையே ஏற்படுத்துகிறார்கள்; அவர்கள் பாரதத்தைத் தூய்மையற்றதாக்குகின்றார்கள். உதாரணமாக, ஒரு முதற்தர சந்நியாசி சரீரத்தை விட்டு நீங்க இருக்கும் தறுவாயில், தான் தனது சரீரத்தை நீக்கி, பிரம்ம தத்துவத்துடன் இரண்டறக் கலக்கப் போகின்றார் என்ற நம்பிக்கையுடன் இருப்பார். அச்சந்தர்ப்பத்தில் அவர் ஏனையோருக்கு நன்மையை ஏற்படுத்த மாட்டார், ஏனெனில் அவர் நன்மை

அளிப்பவரான தந்தையின் குழந்தை இல்லை. நீங்களே நன்மையளிக்கின்ற, தந்தையின் குழந்தைகள், ஆகவே நீங்கள் எவருக்கும் இழப்பினை ஏற்படுத்தக்கூடாது. நீங்கள் மற்றவர்களுக்கு நன்மையளிக்கும் பொருட்டே நீங்கிச் செல்வீர்கள். இது ஒரு தூய்மையற்ற உலகம். தந்தை ஒரு கட்டளையைப் பிறப்பித்துள்ளார்: விகாரத்தில் ஈடுபடுவதன் மூலம் படைக்கப்பட்ட இந்தப் படைப்பு எங்களுக்குத் தேவையில்லை; அது தமோபிரதான் ஆகும். நீங்கள் அரைக் கல்பமாக, காம வாளைப் பயன்படுத்துவதால், ஒருவருக்கொருவர் துன்பத்தையே அளித்தீர்கள். இராவணனது ஐந்து தீய ஆவிகளே உங்களுக்குத் துன்பத்தைக் கொடுத்தன, ஆகவே இவையே உங்கள் கொடிய எதிரிகள். "தங்க இலங்கை" போன்ற அத்தகைய எந்தவோர் இடமும் இருக்கவில்லை. அவர்கள் அக்கதைகளை உருவாக்கியுள்ளார்கள். தந்தை கூறுகின்றார்: இது ஓர் எல்லையற்ற விடயம். இந்தக் கணத்தில், முழு மனித உலகமும் இராவணனின் சங்கிலிகளினால் பிணைக்கப்பட்டுள்ளது. சஞ்சிகையில், அவர்கள் நல்லதொரு படத்தைக் காட்டியுள்ளனர்: அனைவரும் இராவணனின் கூண்டில் உள்ளனர். அனைவரும் துன்பக் குடிலில் உள்ளார்கள். துன்பமற்ற குடில்கள் எங்கும் இல்லை. அசோகா (துன்பத்தில் இருந்து விடுபட்ட) ஹோட்டெல் (போஜனசாலையும் தங்கும் இடமும்) எதுவுமில்லை: அனைத்தும் துன்ப ஹோட்டெல்களே. அவர்கள் அத்தகைய அழுக்கான செயல்களைச் செய்கின்றார்கள்! யார் சுத்தமானவர்கள், யார் அசுத்தமானவர்கள் என்று குழந்தைகளாகிய உங்களுக்குத் தெரியும். நீங்கள் இப்பொழுது மலர்கள் ஆகுகின்றீர்கள். இந்த ஆத்மாவில் பதியப்பட்டுள்ள பாகம் எவ்வளவு நீண்டது என்பதனைக் குழந்தைகளாகிய நீங்கள் புரிந்துகொள்கின்றீர்கள். இவை மிகவும் அற்புதமான கருத்துக்கள். இந்த சின்னஞ்சிறு ஆத்மா, 84 பிறவிகளுக்கான அழிவற்ற பாகத்தால் நிரப்பப்பட்டுள்ளார். அவர்களும் கூறுகின்றார்கள்: நாங்கள் தூய்மையற்றவர்களாகவும், தமோபிரதானாகவும் இருக்கிறோம். இது இப்பொழுது இறுதியாகும். காரணமின்றிய இரத்தக் களறி ஏற்படுகிறது. ஒரு குண்டின் மூலம் பலர் மரணிக்கிறார்கள். இது பழைய உலகம் என்றும், இது நிலைத்திருக்க மாட்டாது என்றும் உங்களுக்கு தெரியும். இது பழைய உலகமும், இவை பழைய சரீரங்களும் ஆகும், நாங்கள் இப்பொழுது புதிய உலகிற்குச் சென்று, புதிய சரீரங்களைப் பெற வேண்டும். இதனாலேயே நாங்கள் ஸ்ரீமத்தின் அடிப்படையில் முயற்சி செய்கின்றோம். நிச்சயமாக, இக்குழந்தைகள்; அனைவரும் அவரது உதவியாளர்கள். நாங்கள் ஸ்ரீஸ்ரீயின் ஸ்ரீமத்தைப் பின்பற்றுவதால், ஸ்ரீ இலக்ஷ்மியாகவும் ஸ்ரீ நாராயணனாகவும் ஆகுகின்றோம். நீங்கள் உப ஜனாதிபதியை ஜனாதிபதி என்று அழைக்க மாட்டீர்கள்; அது சாத்தியமல்ல. கடவுளால் எவ்வாறு கற்களிலும், கூழாங்கற்களிலும் அவதாரம் செய்ய முடியும்? அதர்மம் தலைத்தோங்கும்பொழுது நான் வருகின்றேன் என்று அவர் கூறியதாக நினைவுகூரப்படுகின்றது. கலியுக இறுதியில் நீங்கள் முற்றிலும் தூய்மையற்றவர்களாகி விட்டபொழுது, நான் வரவேண்டும். குழந்தைகளாகிய நீங்கள் இப்பொழுது உங்கள் தந்தையாகிய என்னை நினைவுசெய்ய வேண்டும். பாபா வினவுகின்றார்: உங்களால் பாபாவினை நினைவுசெய்ய இயலுகின்றதா? நீங்கள் பதிலளிக்கின்றீர்கள்: பாபா, நாங்கள் உங்களை மீண்டும் மீண்டும் மறந்து விடுகின்றோம். ஏன்? நீங்கள் உங்கள் லௌகீகத் தந்தையை ஒருபொழுதும் மறப்பதில்லை. எவ்வாறாயினும் இது முற்றிலும் புதிய விடயமாகும். தந்தை அசரீரியான, ஒரு புள்ளி ஆவார். நீங்கள்

இன்னும் இந்தப் பயிற்சியினை வளர்த்துக் கொள்ளவில்லை. அவர்கள் கூறுகின்றார்கள்: நாங்கள் இதனை முன்னர் ஒருபொழுதும் கேள்விப்பட்டதில்லை, இந்த முறையில் நாங்கள் அவரை நினைவுசெய்ததில்லை. தேவர்களுக்;குக் கூட இந்த ஞானம் இருப்பதில்லை. ஏனெனில் இது முற்றாக மறைந்து விடுகின்றது. விஷ்ணுவின் இரு வடிவங்களும் இலக்ஷ்மியும் நாராயணனுமாக ஆகுவதாகக் கூறப்பட்டுள்ளபொழுதும் அவர்களையும் சுயதரிசனச் சக்கரதாரிகள் என அழைக்க முடியாது. இல்லற வாழ்க்கையின் அடையாளமாக அவர்கள், “பிரம்மாவும் சரஸ்வதியும், சங்கரரும் பார்வதியும், இலக்ஷ்மியும் நாராயணனும்” என இரு வடிவங்களைக் காட்டுகிறார்கள்: ஒரேயொருவர் மாத்திரமே அதிமேலானவர், பின்னர் இரண்டாமவரும், மூன்றாமவரும் உள்ளனர். இப்பொழுது தந்தை கூறுகின்றார். குழந்தைகளே, உங்களது சரீரங்களையும், சரீர சமயங்;களையும் மறந்து, உங்களை ஆத்மாக்களாகக் கருதுங்கள்: ஆத்மாவாகிய நான், தந்தையின் குழந்தை ஆவேன். நான் ஒரு சந்நியாசி அல்ல. தந்தையை நினைவுசெய்து, சரீர சமயங்களை மறந்திடுங்கள். இது மிகவும் இலகுவானது. நாங்கள் இப்பொழுது தந்தையுடன் அமர்ந்துள்ளோம். பாபா இங்கமர்ந்திருந்து, பிரம்மாவின் மூலம் விளங்கப்படுத்துகின்றார். பாபாவும், தாதாவும் இணைந்துள்ளார்கள். அவர்கள் இரட்டைக் குழந்தைகள் ஒன்றாகப் பிறந்திருப்பதைக் காட்டுவதைப் போன்று, இதுவும் இருவரின் இணைந்த பாகமாகும். குழந்தைகளாகிய உங்களுக்கு விளங்கப்படுத்தப்பட்டு வருகிறது: உங்கள் இறுதி எண்ணங்கள் உங்களை உங்கள் இலக்குக்கு இட்டுச் செல்லும். மரணத்தின்பொழுது, உங்கள் புத்தி எங்கேயாவது அலைந்தால், நீங்கள் அங்கே பிறப்பெடுக்க நேரிடும். மரணத்தின்பொழுது, நீங்கள் உங்கள் கணவரின் முகத்தைப் பார்த்தால், உங்கள் புத்தி அங்கே செல்கிறது. உங்கள் இறுதிக் கணத்தின் உணர்வில் உள்ளவை ஒரு பெரிய ஆதிக்கத்தைக் கொண்டிருக்கின்றன. அந்தக் கணத்தில், அவர்களுக்குத் தாங்கள் கிருஷ்ணரைப் போன்ற ஒரு குழந்தையாக வேண்டும் என்னும் விழிப்புணர்வு இருப்பின், அப்பொழுது, கேட்கவும் வேண்டாம்! அவர்கள் அப்பொழுது ஒரு மிகவும் அழகான குழந்தையாகப் பிறப்பெடுப்பார்கள். நீங்கள் இப்பொழுது, இறுதிக் கணங்களுக்கான ஒரு போதையை மாத்திரமே கொண்டிருக்க வேண்டும். நீங்கள் இக்கணத்தில் என்ன செய்து கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் சிவபாபாவை நினைவுசெய்கிறீர்கள் என்பதை அறிவீர்கள். அனைவருக்கும் காட்சிகள் கிடைக்கின்றன. மயில் இறகுக் கிரீடத்தை உடையவர்கள் இராதையும் கிருஷ்ணரும் ஆவார்கள், ஏனெனில் அங்கே இளவரசர்களும் இளவரசிகளுமே இருப்பார்கள்; ஆனால் எப்பொழுது? சத்திய யுகத்திலா அல்லது திரேதா யுகத்திலா? இது உங்கள் முயற்சிகளில் தங்கியுள்ளது. நீங்கள் எந்தளவு முயற்சி செய்கிறீர்கள் என்பதன் அடிப்படையிலேயே ஓர் உயர்ந்த அந்தஸ்தைப் பெறுவது தங்கியுள்ளது. நீங்கள் கூறுகிறீர்கள்: நாங்கள் 21 பிறவிகளுக்கு ஓர் இராச்சியத்தைப் பெறுவோம். மம்மாவும் பாபாவும் அதனைப் பெற்றால், நாங்கள் ஏன் அவர்களைப் பின்பற்றக்கூடாது? நீங்கள் உங்களுக்குள் ஞானத்தைக் கிரகித்து, பின்னர் ஏனையோரையும் அதனைக் கிரகிக்கச் செய்ய வேண்டும். நீங்கள் இந்தளவு சேவையைச் செய்ய வேண்டும், பின்னர் உங்களால் 21 பிறவிகளுக்கான ஒரு வெகுமதியைப் பெற இயலும். ஒரு பாடசாலையில் நன்றாக முயற்சி செய்யாதவர்கள் குறைந்த புள்ளிகளையே பெறுகிறார்கள். நீங்கள் ஐந்து

விகாரங்களாகிய, மாயையை வெற்றி கொள்கிறீர்கள்;; உங்கள் யுத்தம் அகிம்சையானது. அவர்கள் இராமரைச் சின்னங்;களுடன் காண்பிக்காமல் விட்டால், நீங்கள் எவ்வாறு சூரிய வம்சத்தவர்களுக்கும், சந்திர வம்சத்தவர்களுக்கும் இடையில் வேறுபாட்டைக் காண முடியும்? தந்தை கூறுகிறார்: நீங்கள் முயற்சி செய்யுமளவுக்கேற்ப, உங்கள் இறுதி எண்ணங்கள் உங்களை உங்கள் இலக்குக்கு இட்டுச் செல்லும். நீங்கள் என்றுமே உங்கள் சரீரத்தைப் பற்றிய எண்ணம் எதனையும் கொண்டிருக்கக்கூடாது; நீங்கள் அனைத்தையும் மறக்க வேண்டும். தந்தை கூறுகிறார்: நீங்கள் சரீரமற்று வந்தீர்கள், சரீரமற்றே நீங்கள் திரும்பிச் செல்ல வேண்டும். அத்தகையதொரு சின்னஞ்சிறிய புள்ளியாகிய நீங்கள் அச்செவிகளினூடாகச் செவிமடுத்து, அந்த வாயினூடாகப் பேசுகிறீர்கள்: ஆத்மாவாகிய நான், ஒரு சரீரத்தை நீக்கி விட்டு, இன்னுமொன்றில் பிரவேசிக்கிறேன். இப்பொழுது, ஆத்மாக்களாகிய நாங்கள் வீடு திரும்பிச் செல்லவுள்ளோம். நாங்கள் மனிதர்களிலிருந்து தேவர்களாகும் வகையில் பாபா எங்களை மிகவும் நன்றாக அலங்கரிக்கிறார். சிவபாபாவை நினைவுசெய்வதனால், நாங்கள் அவர்களைப் போன்று ஆகுகிறோம் என்பதை நீங்கள் அறிவீர்கள். கீதையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது: என்னையும், ஆஸ்தியையும் நினைவுசெய்யுங்கள், நீங்கள் சுவர்க்க அதிபதிகள் ஆகுவீர்கள். இது முற்றிலும் இலகுவானது. நீங்களும் புரிந்துகொள்கிறீர்கள்: உண்மையிலேயே, கல்பம் கல்பமாக, நாங்கள் பிரம்மாவினூடாக உங்களிடமிருந்து ஓர் ஆஸ்தியைப் பெறுகிறோம். பாடப்பட்டும் உள்ளது: பிரம்மாவினூடாகத் தேவ தர்மத்தின் ஸ்தாபனை இடம்பெற்றது. தோல்வியடைவதால், நீங்கள் சத்திரிய தர்மமாகிய, திரேதா யுகத்தினுள் செல்கிறீர்கள். பிரம்மாவினூடாக, பிராமண, தேவ, சத்திரிய தர்மங்கள் எனும் மூன்று தர்மங்களின் ஸ்தாபனை உள்ளது. சத்திய யுகத்தில், வேறெந்தச் சமயமும் இல்லை; பின்னரே ஏனையவை வருகின்றன, ஆகவே அவற்றுடன் எங்களுக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. தாங்கள் ஆதி சனாதன தேவிதேவதா தர்மத்துக்கு உரியவர்கள் என்பதைப் பாரத மக்கள் மறந்து விட்டார்கள், ஆனால் அதுவும் நாடகத்தின் பாகமே, அது அவ்விதமாகவே உருவாக்கப்பட்டுள்ளது. அச்சா.

இனிமையிலும் இனிமையான, அன்புக்குரிய, எப்போதோ தொலைந்து இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் குழந்தைகளுக்கு உங்கள் தாய், தந்தையாக இருக்கும் பாப்தாதாவின் அன்பும் நினைவுகளும் காலை வந்தனங்களும். ஆன்மீகத் தந்தை ஆன்மீகக் குழந்தைகளுக்கு நமஸ்தே சொல்கிறார்.

தாரணைக்கான சாராம்சம்:

1. நீங்கள் ஸ்ரீமத்தின் அடிப்படையில் கற்று, பிறருக்கும் கற்பிக்கின்ற வியாபாரத்தைச் செய்ய வேண்டும். நாடகத்தின் நியதியில் உறுதியாக இருங்கள். எதனைப் பற்றியும் கவலைப்படாதீர்கள்.
2. இறுதியில், வேறெவருமின்றி, தந்தையே நினைவுசெய்யப்பட வேண்டும். ஆகவே, சரீரத்தையும் மறந்து விடுகின்ற பயிற்சியைச் செய்யுங்கள். நீங்கள் சரீரமற்றவர்களாக வேண்டும்.

ஆசீர்வாதம்: நீங்கள் உங்களுடைய மனம் அல்லது புத்தி மூலம் தீயவை எதனையும் தீண்டாத, முழுமையான வைஷ்ணவராகவும், ஒரு வெற்றிகரமான தபஸ்வியாகவும் ஆகுவீர்களாக.

தூய்மையின் ஆளுமையுடனும், இராஜரீகத்துடனும் இருப்பவர்களால் தங்கள் மனங்கள் அல்லது புத்திகள் மூலம் தீயவை எதனையும் தீண்ட முடியாது. பிராமண வாழ்வில், பௌதீகமான கவர்ச்சி அல்லது பௌதீகமான தொடுகையும் தூய்மையின்மையே ஆகும், அவ்விதமாக, எண்ணங்களில் கூட எந்த விகாரத்தாலும் உங்கள் மனமோ அல்லது புத்தியோ கவரப்படுவதை அல்லது தீண்டப்படுவதை அனுமதிப்பதும் தூய்மையின்மையே. எனவே, உங்கள் எண்ணங்களினால் கூட தீயவை எதனையும் தீண்டாதீர்கள். இது ஒரு முழுமையான வைஷ்ணவரை அல்லது வெற்றிகரமான தபஸ்வியைக் குறிக்கின்றது.

சுலோகம்: மனதின் பிரச்சனைகளை முடித்து விட்டு, உங்கள் நிகழ்காலத்தையும், எதிர்காலத்தையும் பிரகாசமானவை ஆக்குங்கள்.

**---ஓம் சாந்தி---**